C.H.H. Parry, 1848-1918

Jerusalem
88.88.D



பாமாலை 503 தேவாவியே, வந்தெங்களை

1 தேவாவியே, வந்தெங்களை
எழுப்பிக் கொண்டிரும்:
மெய்ப் பக்தி ஜீவன் பெலனை
ஈவாக அளியும்.

2 பரம ஜோதி, எங்களில்
இறங்கித் தங்கிடும்;
இருளை நீக்கி மனதில்
வெளிச்சம் தந்திடும்

3 நீர் வீசும் அருள் ஜோதியால்
கர்த்தாவை அறிவோம்;
தேவன்பின் ஆழம் காண்பதால்
அவ்வன்பில் மூழ்குவோம்